# உங்களை ஒருவர் நேசிக்கிறார்!



உங்களை மிகவும் நேசிக்கும் ஒருவர்,
அதை நீங்கள் உணர விரும்புகிறார்!
உங்களுடன் எங்கும் செல்ல ஆவலுடன் உள்ளார்!
உங்கள் இதயத்தில் என்றும் குடிகொள்ள விழைகிறார்!

நம் எல்லோருக்குமே நம்மை எல்லோரும் நேசிக்க வேண்டும், நாமும் மற்றோரை நேசிக்க வேண்டும் என்று ஆசை உள்ளது. நாம் இவ்வாழ்வில் அனுபவிக்கும் அனைத்து துயரங்களுக்கும் அன்பற்ற தன்னலமே முக்கிய காரணம்! நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருவரை ஒருவர் நேசித்தால் பின்பு போர், வன்முறை மற்றும் ஏழ்மைக்கு அங்கு இடமில்லை.

நாம் படும் வலி, வேதனைகள் ஒருபுறம் இருந்தாலும், நாம் வாழும் இவ்வுலகம் அன்பாலும், அபரிமிதமான ஜீவனுடன் நிரம்பி வழிகிறது. அழகான படைப்பின் ஆதாரமே, கடவுள் நம் மனித இனத்தின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்புதானே? பசுமையான புல்வெளிகள், நீண்டுயர்ந்த அழகான மரங்கள், அரும்பும் அழகு மலர்கள், நேர்த்தியாக அஸ்தமிக்கும் சூரியன், முழு நிலவுடன் சேர்த்து கண்சிமிட்டும் நட்சத்திரங்கள், அற்புதமான விலங்குகள், அனைத்துமே இயற்கை நமக்கு தந்துள்ள அற்புதம்!

இவையெல்லாம் நம் நன்மைக்காக, நாம் இரசித்து மகிழ, நம்மை மிகவும் விரும்பும் ஒருவர் படைத்துள்ளார்! அவர் நாம் பிறரை நேசிப்பதையும், நம்மீது பிறர் அன்புகாட்டுவதையும் முக்கியமாக கருதுகிறார். நம் அனைவரின் தேவைகளையும் பூர்த்தியாக்க ஆவலாக உள்ளார். அப்படி இருந்தும்கூட ஏன் இப்படி வெறுப்பு, வன்முறை, சோகம், கஷ்டம் அனைத்தும் நம்மை சூழ்ந்துள்ளது? எல்லாம் நன்றாக நடந்தால் எவ்வளவு நன்மை?

கடவுள் படைத்த இந்த உலகில் ஆரம்பத்தில் இனிமை மட்டுமே நிறைந்திருந்தது. நாமோ கடவுளைப் பின்பற்றாமல் நம் வழியிலேயேச்சென்று, தன்னலத்துடனும், அன்பற்றும் கடவுள் நமக்கு தந்துள்ள அன்புக்கட்டளைகளை மீறி, அவரைவிட்டு வெகுதூரம் விலகி, இவ்வுலகை பாவங்களும், பரிதாபங்களும் நிறைந்த உலகாய் மாற்றிவிட்டோம்.

கடவுள் நம்மை பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவும், நம் வேதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, என்றென்றும் சந்தோஷம், அமைதி, அன்பு, கருணை இவற்றால் நிறைத்து அவரை என்றென்றைக்கும் நேசிக்கும் வண்ணம், அவரை மட்டுமின்றி நம்மையும் நாம் நேசிக்கும்படி அமைக்கவும் விரும்புகிறார். *அன்பே வடிவானவர் கடவுள்! (1 யோவான் 4:8)* அவரை உங்களுக்குத் தெரியுமா?

கடவுள் தம் பேரன்பை இவ்வுலகிற்கு தெரியப்படுத்தவேண்டி தன் ஒரே மகனான இயேசு கிறிஸ்துவினை நமக்குத் தந்தருளினார். இயேசு இவ்வுலகில் இருந்தபோது அவரின் கருத்துக்களையும், செயல்களையும் ஏற்காமல் அவரைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கி, இறுதியில் அவரை சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால் மூன்றே நாட்களில் மீண்டும் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து விண்ணுலகத்திற்கு திரும்பச் சென்றார். நீங்கள் நினைத்தே பாராஅளவுக்கு இயேசு உங்களை பாவத்தின் பிடியில் இருந்து மீட்டு உங்களுக்கு நித்திய ஜீவனைத்தரவேண்டி, தன்னையே பலிக்கொடுத்தார். மேலும் அவரை நம்பி ஏற்றுக் கொள்ள விரும்புகிறார்.

இயேசு பிரான் இன்று, இங்கு, இவ்வுலகில் மட்டுமன்றி என்றும், எங்கும் உங்களுக்கு உறுதுணையாக, ஆத்மார்த்தமான தொடர்புடன் இருக்க விரும்புகிறார். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே! அவரை உங்கள் இதயத்தில் குடிவர அனுமதியுங்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட இயேசுநாதர் என்றும் நிறைவான புதுவாழ்வினை உங்களுக்கு தந்தருள்வார்.

*“அன்புமிக்க இயேசுபிரானே! என் பாவங்களை மன்னியுங்கள்! எனக்காக, என் நன்மைக்காக நீங்கள் உங்கள் உயிரைத் தந்தீர்கள் என நான் நம்புகிறேன்! என் இதயத்தின் கதவைத் திறந்து வைத்து, நீங்கள் குடியேறக் காத்திருக்கிறேன். என்னை உங்கள் அன்பினாலும், பரிசுத்த ஆவியின் கிருபையாலும் நிரப்புங்கள்! உங்களைப்பற்றி உங்களது வேதாகமத்தினைப் படிப்பதன்மூலம் மேலும் அறிந்து கொண்டு உங்கள் வழியில் நடந்து பிறருக்கு நன்மை செய்ய, அன்பு காட்ட ஆசீர்வதியுங்கள். ஆமென்! “*

மேற்கண்ட பிரார்த்தனையை நீங்கள் இதயபூர்வமாக சொன்னால், இயேசுநாதர் நிச்சயம் உங்களினுள் பிரவேசிப்பார்! வாழ்வார்! *“இதோ உங்கள் இதயக்கதவின் முன்னின்று தட்டுகிறேன். யார் அதைக்கேட்டு கதவைத் திறந்தாலும் நான் அவர் இதயத்தில் வந்து தங்குவேன்! அவனுடன் போஜனம் செய்வேன். அவனும் என்னோடு உணவருந்துவான். (வெளிப்பாடு 3:20)”* எனக்கூறி உள்ளார்!

மேலும் அறிய: https://activated.org/en